# DEPOSITION OF WITNESS

## (Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, VANDAVASI.

| | | |
|---|---|---|
| Calendar | : | Case No. C.C.94/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Deposition of Witness for | : | |
| Prosecution | : | |
| Defence | : | அ.சா. 1 |
| Name | : | விஜயபாலமுருகன் |
| Father’s Name | : | |
| Village | : | |
| Taluk | : . | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : . | |

Solemnly affirmed in acordance with the provisions of Act X of 1873 of the year of 21.07.2025.

**எதிரி ஆஜர் இல்லை. குவிமுச பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டுள்ளது.**

<u>முதல் விசாரணை</u>

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். மருந்து உரக்கடை வைத்து நடத்தி வருகிறேன். கடந்த 2011 வருடம் தேதி ஞாபகம் இல்லை. எனக்கு தெரிந்த வடிவேல் என்பவர் ஒரு இருசக்கர வாகனத்திலும், நான் ஒரு இருசக்கர வாகனத்திலும் வெண்குன்றம் பெட்ரோல்

பங்கில் பேட்ரோல் போட்டோம். அப்போது காலை 8.45 மணி அளவில் இருக்கும். அவர் எனக்கு முன்னால் சென்றார் நான் அவர் பின்னால் சென்றேன். அவர் சாலையில் ஏறினார். அப்போது சிமெண்ட் டாரஸ் லாரி காஞ்சிபுரத்தில் இருந்து வந்தவாசி நோக்கி வந்தது. அந்த சிமெண்ட் லாரியை ஒரு அரசு பேருந்து திடீரென்று முந்திவந்தது(ஓவர்டேக்). அதனால் அந்த அரசு பேரூந்து வடிவேல் என்பவர்மீது மோதியது. அதில் அவரது வலது கை ஷோல்டர் கிழிந்துவிட்டது. 15 நிமிடத்திற்கு மேல ் ஆகியும ் ஆம்புல்ஸ ் வரவில்லை. அருகில் இருந்த இஸ்லாமிய நண்பரிடம் அவர்களது ஆம்புலன்சை வரவழைத்து வந்தவாசி அரசு மருத்துவமனையில ் சேர்த்தோம். அங்கு உடனடியாக செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்குசெல்ல அறிவுறுத்தினார்கள ் நாங்கள ் செல்லும ் வழியல் அவர் இறந்துவிட்டார். இதுசம்மந்தமாக நான் வந்தவாசி தெற்கு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். தற்போது என்னிடம ் காட்டப்படும ் புகாரில ் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் அத.சா.ஆ.1 ஆகும். விபத்தை ஏற்படுத்திய அரசு பேரூந்து சம்பவ இடத்தில் நிற்காமல் நேராக வந்தவாசி காவல் நிலையத்தில் சென்று நின்றது என்று நாங்கள் புகார் கொடுக்க சென்றபோது போலிசார் சொன்னார்கள். நான் அப்போது விபத்து ஏற்படுத்திய அரசு பேருந்தை ஓட்டிய நபரை பார்க்கவில்லை. ஆனால் அந்த பேரூந்தின் பதிவு எண் பார்த்தேன் அது டி.என்.32 என் 3232 ஆகும். அந்த வண்டி எண்ணை அங்கிருந்தவர்கள் குறித்து என்னிடம் சொன்னார்கள். காவல் நிலையத்திலும் மேற்படி வண்டி எண்ணை என்னிடம் போலிசார் சொன்னார்கள்.போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை.**

எதிரி தரப்பில் வழக்கறிஞர் ஆஜர், குறுக்கு விசாரணை இல்லை.